செய்தி வெளியீடு எண் : 1735 நாள் : 21.10.2024

# செய்தி வெளியீடு

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில், 2024 – தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, பொது மக்கள் தங்களின் சொந்த ஊர்களுக்கு செல்வதற்கு வசதியாக, 14,086 பேருந்துகள் இயக்கம் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.சா.சி.சிவசங்கர் அவர்களின் தகவல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், 2024–ஆம் ஆண்டு வரும் **தீபாவளி பண்டிகையை** முன்னிட்டு, போக்குவரத்துத் துறையின் சார்பில் மேற்கொள்ளப்படும் சிறப்பு ஏற்பாடுகள் மற்றும் சிறப்பு பேருந்துகள் இயக்கம் குறித்த ஆலோசனைக் கூட்டமானது, **மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.சா.சி.சிவசங்கர்** அவர்களின் தலைமையில், இன்று (21/10/2024) தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் போக்குவரத்துத் துறையை சார்ந்த அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.க. பணீந்திரரெட்டி, இ.ஆ.ப., போக்குவரத்துத் துறை ஆணையர், காவல்துறை உயர் அலுவலர்கள், அரசுத் துறை அலுவலர்கள் மற்றும் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர்கள் கலந்து கொண்டனர்.

**மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:–**

**தீபாவளி பண்டிகையை** முன்னிட்டு, வரும் 28/10/2024 முதல் 30/10/2024 வரையில், சென்னையிலிருந்து தினசரி இயக்கக் கூடிய 2,092 பேருந்துகளுடன், 4,900 சிறப்புப் பேருந்துகள் என மூன்று நாட்களுக்கும் சேர்த்து ஒட்டு மொத்தமாக, 11,176 பேருந்துகளும், பிற ஊர்களிலிருந்து மேற்கண்ட மூன்று நாட்களுக்கு 2,910 சிறப்பு பேருந்துகள் என மொத்தமாக 14,086 பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

**தீபாவளி பண்டிகை** முடிந்த பின்னர், பிற ஊர்களிலிருந்து சென்னைக்கு, வரும் 02/11/2024 முதல் 04/11/2024 வரையில், தினசரி இயக்கக் கூடிய 2,092 பேருந்துகளுடன் 3,165 சிறப்புப் பேருந்துகளும் மூன்று நாட்களும் சேர்த்து ஒட்டுமொத்தமாக 9,441 பேருந்துகள் ஏனைய பிற முக்கிய ஊர்களிலிருந்து பல்வேறு ஊர்களுக்கு 3,165 சிறப்பு பேருந்துகள் என மொத்தமாக 12,606 பேருந்துகளும் இயக்கப்படுகின்றன.

**தீபாவளி பண்டிகை – சிறப்பு பேருந்துகள் இயக்கம்**

| சென்னையிலிருந்து பின்வரும் பேருந்து நிலையங்களிலிருந்து பேருந்துகள் இயக்கப்படும் (28/10/2024 முதல் 30/10/2024 வரை) |
|---|

| வ. எண் | பேருந்து நிலையம் | இயக்கப்படும் பேருந்துகள் |
|---|---|---|
| 1. | **கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் (KCBT), கிளாம்பாக்கம்** | புதுச்சேரி, கடலூர், சிதம்பரம், திருச்சி, மதுரை, தூத்துக்குடி, செங்கோட்டை, திருநெல்வேலி, சேலம், கோயம்புத்தூர், வந்தவாசி, போளூர், திருவண்ணாமலை, கும்பகோணம் மற்றும் தஞ்சாவூர் மார்க்கமாக செல்லும் பேருந்துகள். |
| 2. | **புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பேருந்து நிலையம், கோயம்பேடு** | கிழக்கு கடற்கரை (ECR), காஞ்சிபுரம், வேலூர், பெங்களூர் மற்றும் திருத்தணி மார்க்கமாக செல்லும் பேருந்துகள். |
| 3. | **மாதவரம் புதிய பேருந்து நிலையம்** | பொன்னேரி, ஊத்துக்கோட்டை வழியாக ஆந்திரா மாநில மார்க்கமாக செல்லும் பேருந்துகள் மற்றும் வழக்கமாக இயக்கப்படும் திருச்சி, சேலம், கும்பகோணம் மற்றும் திருவண்ணாமலை பேருந்துகள். |

**2024 – தீபாவளி பண்டிகைக்கு முன்பு – நாள்தோறும் இயக்கப்படும் பேருந்துகள் எண்ணிக்கை**

**(28/10/2024 முதல் 30/10/2024 வரை)**

| நாள் கிழமை | தினசரி இயக்கப்படும் நிர்ணயப் பேருந்துகள் | சிறப்புப் பேருந்துகள் இயக்கம் | |
|---|---|---|---|
| | | சென்னையில் இருந்து சிறப்பு இயக்கம் | பல்வேறு முக்கிய இடங்களிலிருந்து |
| 28.10.2024 திங்கள் | 2,092 | 700 | 330 |
| 29.10.2024 செவ்வாய் | 2,092 | 2,125 | 1,130 |
| 30.10.2024 புதன் | 2,092 | 2,075 | 1,450 |
| **உள் மொத்தம்** | **6,276** | **4,900** | **2,910** |
| **மொத்தம்** | **6,276** | **சிறப்புப் பேருந்துகள் எண்ணிக்கை 7,740** | |
| **ஆக மொத்தம் 14,086 பேருந்துகள் இயக்கப்படுகின்றன.** | | | |

**வழித்தட மாற்றம்**

**கார் மற்றும் இதர வாகனங்கள்**

கார் மற்றும் இதர வாகனங்களில் செல்வோர், போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டு, தாம்பரம், பெருங்களத்தூர் வழியாக செல்வதை தவிர்த்து (OMR) திருப்போரூர் – செங்கல்பட்டு அல்லது வண்டலூர் வெளிச்சுற்று சாலை வழியாக செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**முன்பதிவு மையங்கள் செயல்படும் இடங்கள்**

**(28/10/2024 முதல் 30/10/2024 வரை**

**(காலை 7.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை)**

| பேருந்து நிலையங்கள் | முன்பதிவு மையங்கள் |
|---|---|
| **கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்** (KCBT), **கிளாம்பாக்கம்** | 07 |

| | |
|---|---|
| கோயம்பேடு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பேருந்து நிலையம் | 02 |
| **மொத்தம்** | **09** |

**<u>முன்பதிவு வசதி</u>**

முன்பதிவு செய்து கொள்ள நடைமுறையில் உள்ள இணையதள வசதியான tnstc official app மற்றும் www.tnstc.in போன்ற இணைய தளங்கள் மூலமாகவும் முன்பதிவு செய்துகொள்ள வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**<u>2024 – தீபாவளி பண்டிகைக்கு பின்பு – நாள்தோறும் இயக்கப்படும் பேருந்துகள் எண்ணிக்கை</u>**

**(02.11.2024 முதல் 04.11.2024 வரை)**

| நாள் கிழமை | தினசரி இயக்கப்படும் நிர்ணயப் பேருந்துகள் | சிறப்புப் பேருந்துகள் இயக்கம் | |
|---|---|---|---|
| | | பல்வேறு இடங்களிலிருந்து சென்னைக்கு | சென்னையை தவிர்த்து இதர இடங்களுக்கு |
| 02.11.2024 சனி | 2,092 | 600 | 685 |
| 03.11.2024 ஞாயிறு | 2,092 | 1,735 | 1,540 |
| 04.11.2024 திங்கள் | 2,092 | 830 | 1,180 |
| **உள் மொத்தம்** | **6,276** | **3,165** | **3,405** |
| **மொத்தம்** | **6,276** | **சிறப்புப் பேருந்துகள் எண்ணிக்கை 7,605** | |
| **ஆக மொத்தம் 12,846 பேருந்துகள் இயக்கப்படுகின்றன.** | | | |

**<u>பயணிகளின் வசதிக்காக 24x7 கட்டுப்பாட்டு அறை</u>**

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளின் இயக்கம் குறித்து அறிந்து கொள்வதற்கும் மற்றும் இயக்கம் குறித்து புகார் தெரிவிப்பதற்கு ஏதுவாக, **94450 14436** என்ற தொலைபேசி எண்ணை (24x7) மணி நேரமும் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும், ஆம்னி பேருந்துகளில் அதிக கட்டணம் வசூல் செய்தல் உள்ளிட்ட புகார்களுக்கு **1800 425 6151** (Toll Free Number) மற்றும் **044–24749002, 044–26280445, 044–26281611** என்ற தொலைபேசி எண்களை தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இதுமட்டுமின்றி, பயணிகளின் நலன் கருதி, கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறை (Control Room) 24 மணி நேரமும் செயல்படும்.

மேலும், பேருந்து நிலையங்களுக்கு வருகை தரும் பயணிகள் பேருந்து மற்றும் வழித்தடம் குறித்த விவரங்களை அறிந்து கொள்ள ஏதுவாக பல்வேறு இடங்களில் தகவல் மையங்கள் (May I Help You) அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் சிரமமின்றி பயணிக்க முன்பதிவு வசதியினை பயன்படுத்தி பாதுகாப்பான முறையில் பயணம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**<u>மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் இணைப்புப் பேருந்துகள்</u>**

பொதுமக்களின் வசதிக்காக கோயம்பேடு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பேருந்து நிலையத்திலிருந்து மேற்கூறிய 2 பேருந்து நிலையங்களுக்கு செல்ல ஏதுவாக மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் இணைப்புப் பேருந்துகள் 24 மணி நேரமும் இயக்கப்படும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu